# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2243/3 - 2021 අගෝස්තු මස 30 වැනි සඳුදා - 2021.08.30

*2243/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் (40 ஆம் அத்தியாயம்)**

*(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
*2021, ஓகத்து 30.*

**ஒழுங்குவிதிகள்**

பாகம் I

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசரகால (அத்தியாவசிய உணவு வழங்குதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

*2.* இவ்வொழுங்குவிதிகளின் குறிக்கோள், ஒழுங்கீனங்களை ஏற்படுத்துகின்றதும் பாவனையாளர்களுக்கும் பொதுமக்களின் சேமநலத்துக்கும் வசதியீனத்தை விளைவிக்கின்றதுமான சந்தையொன்றை உருவாக்கி, அரிசியும் சீனியும் உட்பட அத்தியாவசியமான தொகையான உணவுகளை ஒளித்துவைத்தல், அவற்றின் விநியோகத்தை இடையீடுசெய்தல், உயர்ந்த விலைகளை விதித்தல் போன்ற செயற்பாடுகளை தடுப்பதாகும். ஆதலால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் அல்லது அதிகாரிகள், உத்தரவாத விலையின் அல்லது சுங்கத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட விலைகளின் அடிப்படையில் நெல், அரிசி, சீனி உட்பட தொகையான அத்தியாவசியமான உணவுகளை வாங்குவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் குறிக்கோள்கள்.




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வழங்குதலும் வேண்டும். கடன்கொடுத்தோரிடமிருந்து அத்தகைய தொகைகளை வாங்குவதற்கு அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களை அறவிடுவதற்கு அத்தகைய வங்கிகள் வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

பொருள்கோடல்.

3. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில், அதன்கண் வேறேதேனும் வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய அல்லது அதன்கண் வெளிப்படையாக வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, அல்லது சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, மன்றாடியார் தலைமையதிபதி, மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி, பிரதி மன்றாடியார் தலைமையதிபதி, அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக அதற்கெனச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அரச சட்டத்தரணியாகச் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சட்டத்தரணி என்போரை உள்ளடக்கும்;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்குச் சனாதிபதியினால், பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கப்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும்;

"அவசரகால ஒழுங்குவிதி" என்பது, இவ்வொழுங்குவிதிகளுள் எவையும் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட வேறெவையேனும் ஒழுங்குவிதிகள் என்று பொருளாகும்;

"அத்தியாவசிய சேவை" என்பது, சனாதிபதியினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பொதுப்பயன்பாட்டு சேவை அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஏதேனும் சேவை என்று பொருளாகும் என்பதுடன் இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை அல்லது அதன் கிளையையும் உள்ளடக்கும்; அத்துடன் இவ்வொழுங்குவிதிகளின் 10 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி அதன்பின்னர் வெளிப்படுத்தப்படக்கூடிய ஏதேனும் சேவையையும் உள்ளடக்கும்;

"பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி" என்பது, எவரேனும் சிரேட்ட பிரதிப்பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்;

"காணி" என்பது, உணவுகள் களஞ்சியப்படுத்தப்படுகின்ற அல்லது பதனிடப்படுகின்ற காணிகளை அல்லது கட்டிடங்களின் பாகங்களை அல்லது பதனிடுதல் நிலையங்களை உள்ளடக்கும்;

"வாகனம்" என்பது, உணவு விநியோகத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் என்று பொருளாகும்;

"பொலிசு அலுவலர்" என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பொலிசாரின் எவரேனும் உறுப்பினர் என்று பொருளாகும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, அரசியலமைப்பின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளை உடையதாதல் வேண்டும்; அத்துடன்

"இலங்கை" என்பது, இலங்கையின் காணி இடப்பரப்பு என்று பொருளாகும் என்பதுடன் அதன் ஆள்புல நீர்ப்பரப்புகளையும் வான்வெளியையும் உள்ளடக்கும்.

(2) பொருள்கோடற் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவசரகால ஒழுங்குவிதிகளினதும் அவ்வொழுங்குவிதிகளின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளினதும் அல்லது விதிகளினதும் பொருள்கோடலுக்கு, ஏதேனும் சட்டத்தின், அல்லது கட்டளைச்சட்டத்தின் அல்லது தேசிய அரசுப்பேரவைச் சட்டத்தின் பொருள்கோடலுக்கு அவை ஏற்புடையதாகின்ற அதேமுறையில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஆவணத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அவசரகால ஒழுங்குவிதிபற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், அது முரணாகவிருப்பதாகக் காணப்பட்டாலொழிய, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறான அத்தகைய ஒழுங்குவிதிக்கான குறிப்பீடொன்றாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஒரு சேவை அல்லது இவ்வொழுங்குவிதிகளின் 10 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படியான ஏதேனும் சேவை, பொதுப்பயன்பாட்டுக்கு அல்லது பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதென வெளிப்படுத்தி சனாதிபதியினால் ஆக்கப்பட்டவொரு கட்டளை, முழு இலங்கைதொடர்பிலும் அல்லது அத்தகைய கட்டளையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் இடப்பரப்பு அல்லது இடம்தொடர்பில் பொதுவாக ஆக்கப்படலாம்.

(5) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு அல்லது கட்டளை, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை வலுவிலிருக்கும் காலப்பகுதியைக் குறித்துரைத்தல் வேண்டுமென அத்தகைய அவசரகால ஒழுங்குவிதி தேவைப்படுத்துமிடத்து, அத்தகைய காலப்பகுதி அத்தகைய பணிப்பில் அல்லது கட்டளையில் அவ்வாறு குறித்துரைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதி அவ்வாறு குறித்துரைக்கப்படாவிடின், அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை, அத்தகைய ஒழுங்குவிதி வலுவிலுள்ள காலப்பகுதியின்போது வலுவிலுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சனாதிபதியின் தத்துவங்கள்.*

4. வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் சனாதிபதிக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், சட்டத்தினால் சனாதிபதிக்கு அல்லது வேறு அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு உரித்தளிக்கப்பட்ட வேறெவையேனும் உரிமைகளுக்கு அல்லது தத்துவங்களுக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமைகளை அல்லது தத்துவங்களை மதிப்புக்குறைப்பனவாக இருத்தலுமாகாது.

*அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் குறித்தளித்தல்.*

5. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் சனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, அதற்கெனச் சனாதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அமைச்சரினால் நடைமுறைப்படுத்தப்படலாம், கையளிக்கப்படலாம் அல்லது புரியப்படலாம்.

*தகுதிவாய்ந்த அதிகாரி.*

6. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக, பொதுவாக இலங்கைமுழுவதற்கும் அல்லது அத்தகைய ஆள் எந்த ஆவணத்தின்மூலம் நியமிக்கப்படுகின்றாரோ அந்த ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்காக அல்லது இடத்துக்காக எவரேனுமாள் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படலாம்:

ஆயின், ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பின் அல்லது இடத்தின் ஏதேனும் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இரண்டு ஆட்களை அல்லது அதற்கு மேற்பட்டோரை நியமித்தல் ஆனது இவ்வொழுங்குவிதியின் முற்போந்த எவையேனும் ஏற்பாடுகளினால் தடுக்கப்படுகின்றதாகக் கருதப்படுதலாகாது.

(2) பதவியொன்றை வகிப்பவர் அத்தகைய பதவியின்மூலம் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படுமிடத்து, முரணான ஏற்பாடெதுவும் வெளிப்படையாக இராவிடின், அந்நேரத்தில் அத்தகைய பதவிக்கான கடமைகளைப் புரிகின்ற ஆள் அத்தகைய நியமனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்.*

7. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக எவரேனுமாளுக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் அறிவித்தல், அத்தகைய ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எவையேனும் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, அவரது கடைசியாக அறியப்பட்ட வதிவிடத்துக்கு அல்லது வழக்கமான வதிவிடத்துக்கு அல்லது அவரது தொழிலிடத்துக்கு அஞ்சலின்மூலம் அதனை அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

*கட்டளைகள் முதலியவற்றை இல்லாதொழித்தல் அல்லது வேறுபடுத்தல்.*

8. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்மூலம் ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குவதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பொருளமைத்துக்கொள்ளும்போது, அத்தகைய கட்டளை அல்லது விதி எந்த நிபந்தனைகளில் அல்லது நிபந்தனைகளின்கீழ், எவையேனும் இருப்பின், ஆக்கப்பட்டதோ அதேமுறையிலும் அதே நிபந்தனைகளுக்கமையவும் அத்தகைய கட்டளையை அல்லது விதியை இல்லாதொழிப்பதற்கான அல்லது வேறுபடுத்துவதற்கான தத்துவத்தை உள்ளடக்குவதற்காகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### அத்தியாவசியச் சேவைகள்

*ஆணையாளர் தலைமையதிபதி அத்தியாவசியச் சேவைகளை ஒருங்கிணைத்தல்.*

9. (1) சனாதிபதி, கட்டளைமூலம், முழு இலங்கைக்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கான அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியாக எவரேனுமாளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம். அத்தியாவசியச் சேவைகளைப் பேணுதல் தொடர்பான எல்லாச் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அவரது கடமையைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பிரதி ஆணையாளர்களை அல்லது உதவி ஆணையாளர்களைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.

(3) அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை (2) ஆம் உபஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு பிரதி ஆணையாளருக்கு அல்லது உதவி ஆணையாளருக்குக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழான பொறுப்புக்களைப் புரியும் நோக்கத்துக்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றைப் பிரயோகிக்கலாம்:-

(அ) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அல்லது 11 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியொருவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம்;

(ஆ) அவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக 12 ஆம் ஒழுங்குவிதியினால் தகுதிவாய்ந்த அதிகாரிக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம்;

(இ) 13 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் எவரேனும் அதிகாரிக்கு அல்லது அலுவலருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள அவ்வொழுங்குவிதியின்கீழான ஏதேனும் தத்துவம்.

(5) அத்தியாவசியச் சேவைகளின் உரிய பேணுகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவோருக்கு அவசியமான பணிப்புகளை விடுக்கலாம்:-

(அ) 11 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரி;

(ஆ) 13 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் தத்துவம் குறித்தளிக்கப்பட்டுள்ள எவரேனும் அதிகாரி அல்லது அலுவலர்;

அத்துடன் அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் இணங்கியொழுகுதல், விடயத்துக்கேற்ப, அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியின், அதிகாரியின், அலுவலரின் அல்லது ஒருங்கிணைத்தல் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

*அத்தியாவசியச் சேவைகளைப் பேணுதலும் அச்சேவைகளை இடையீடுசெய்தல் முதலியனவும்.*

*10.* இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சேவை அத்தியாவசியச் சேவையாக வெளிப்படுத்தப்பட்டு 2021, ஓகத்து 30 ஆந் திகதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஏதேனும் கடமையில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாள் -

(அ) அத்தகைய கட்டளைத் திகதியிலிருந்து ஒருநாள் முடிவுற்றபின்னர் அவரது கடமைத் தலத்தில் அல்லது அவர் சேவையாற்றும் இடத்தில் சமூகமளிக்கத்தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து அல்லது ஏதேனும் வழமையான வேலைநாளின் அல்லது அந்நாளின் ஏதேனும் பாகத்தின் தேவைப்பட்ட முழுக்காலப்பகுதியின்போது அவரது சேவை நியதிநிபந்தனைகளுக்கிணங்க அவரது கடமையைப் புரியாதிருக்குமிடத்து அல்லது வேலைசெய்யத் தவறுமிடத்து அல்லது வேலைசெய்ய மறுக்குமிடத்து அல்லது வேலைத்தலத்தை விட்டுச்செல்லுமிடத்து அல்லது வேலைக்குவருகைதராதிருக்குமிடத்து; அல்லது

(ஆ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவையில் ஈடுபட்டிருக்கையில் அல்லது தொழிலுக்கமர்த்தப் பட்டிருக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அல்லது அவரது தொழில்தருநரினால் அல்லது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற எவரேனுமாளினால் கொடுக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதியினுள் (அத்தகைய காலப்பகுதி வழமையான வேலை மணித்தியாலங்களாகவிருப்பினுஞ்சரி அல்லது அத்தகைய வேலை மணித்தியாலங்களுக்கு வெளியேயாயினுஞ்சரி அல்லது விடுமுறைநாட்களாயினுஞ்சரி) அத்தகைய தொழில்தருநரினால் அல்லது அத்தகைய ஆளினால் பணிக்கப்பட்ட அத்தகைய கடமையைப் புரிவதற்குத் தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து.

அத்தகைய வராமை அல்லது அத்தகைய கடமையைப் புரியத்தவறியமை அல்லது மறுத்தமை ஏதேனும் வேலைநிறுத்தத்துக்கு அல்லது வேறு ஒழுங்கமைப்புச்சார் செயற்பாட்டுக்கு உடந்தையளித்தமைகாரணமாக ஏற்பட்டது என்பது எவ்வாறிருப்பினும் -

(i) வேறேதேனும் சட்டத்தில் அல்லது அத்தகைய ஆளின் ஏதேனும் ஊழிய உடன்படிக்கையின் நியதிநிபந்தனைகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவர் தமது சேவையை உடனடியாக முடிவுறுத்தியுள்ளார் அல்லது தமது சேவையிலிருந்து விலகியுள்ளார் என எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்; அல்லது

(ii) மேலதிகமாக, அவர் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

இப்பந்தியில் "குறித்துரைக்கப்பட்ட சேவை" என்பது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதியினால் வெளிப்படுத்தப்பட்ட அத்தியாவசியச் சேவை என்றும் அத்தகைய சேவை தொடர்பாக ஏதேனும் கடமையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாளினால் வழமையான வேலை மணித்தியாலங்களுக்கு வெளியே அல்லது விடுமுறை நாட்களில் புரியப்படுவதற்குக் கட்டளை இடப்படமுடியுமான ஓர் அத்தியாவசியச் சேவை என்றும் பொருளாகும்.

(2) ஏதேனும் சேவை ஓர் அத்தியாவசியச் சேவையாக வெளிப்படுத்தப்படுமிடத்து —

(அ) ஏதேனும் முறையில் -

(i) அத்தகைய சேவையைப் பேணுவதனை இடையீடுசெய்கின்ற, அதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அதனைத் தாமதப்படுத்துகின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற;

(ii) அத்தகைய சேவையை அல்லது அத்தகைய சேவைதொடர்பான ஏதேனும் சேவையைப் பேணுவதில் ஈடுபட்டுள்ள அல்லது அத்தகைய சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனுமாளை அவரது வேலைத்தலத்துக்கு வராதிருப்பதற்கு இடையீடுசெய்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவரைத் தடுக்கின்ற;

(iii) அத்தகைய சேவையை அல்லது அத்தகைய சேவை தொடர்பான ஏதேனும் சேவையைப் பேணுவதில் ஈடுபட்டுள்ள அல்லது அத்தகைய சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனுமாளைக் கடமைக்கு வராதிருக்கும்படி வற்புறுத்துகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற;

(iv) அத்தகைய சேவை ஓர் அரசாங்கத் திணைக்களமாக அல்லது அத்தகைய திணைக்களத்தின் ஏதேனும் பிரிவாக இருப்பின், அத்தகைய சேவைக்குப் பதிலான ஒரு சேவையை அல்லது அத்தகைய சேவைக்குச் சமாந்தரமான ஒரு சேவையைத் தாபிக்கும்படி அல்லது பேணும்படி வற்புறுத்துகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற;

(v) அத்தகைய சேவையை அல்லது அத்தகைய சேவை தொடர்பான ஏதேனும் சேவையைப் பேணுவதில் ஈடுபட்டுள்ள அல்லது அத்தகைய சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனுமாளை அத்தகைய சேவையை விட்டுச்செல்லும்படி (அத்தகைய ஆள் அத்தகைய சேவையை விட்டுச்சென்றாலுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) வற்புறுத்துகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற;

(vi) அத்தகைய சேவையை அல்லது கடமையை நிறைவேற்றுதல் தொடர்பாக வேறெவரேனுமாள் தொழிலை ஏற்றுக்கொள்வதனை அல்லது முனைவதனைத் தடுக்கின்ற,

எவரேனுமாள்;

(ஆ) ஏதேனும் செயல் அல்லது ஏதேனும் பேச்சு அல்லது ஆவணம்மூலம் இவ்வுபவொழுங்குவிதியின் (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயலைப்புரிவதற்கு (அத்தகைய ஆள் அத்தகைய நடவடிக்கையின் விளைவாக அத்தகைய செயலைப் புரிந்தாலுஞ்சரி அல்லது புரியாவிட்டாலுஞ்சரி) வேறெவ ரேனுமாளை வற்புறுத்துகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற எவரேனுமாள்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பாகம் III

## தனியார் உணவுக்களஞ்சியங்களிலும், நெற்களஞ்சியங்களிலும் நெல் ஆலைகளிலும் வைத்திருக்கப்பட்ட அத்தியாவசிய உணவையும் இதன்கண் குறித்துரைக்கப்பட்ட கையிருப்புகளையும், பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் வழங்குகையைப் பேணுவதற்கும் அரசின் இடையீடு

தவறொன்றைப் புரிதல் முதலியவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களையும் வளவுகளையும் உடமையிலெடுத்தல்.

11. (1) எவையேனும் வளவுகள் இவ்வொழுங்குவிதிகளின்கீழான தவறொன்றைப் புரிவதற்கான அல்லது தவறொன்றை புரிதல் சம்மந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்படுமிடத்து, இயைபான இடப்பரப்பின் பொலிசுக் கண்காணிப்பாளர், நெல், அரிசி, சீனி உட்பட அத்தியாவசிய உணவுக் கையிருப்புகளைக் களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அத்தகைய வளவுகளைத் தனது உடைமையிலெடுத்தல் வேண்டுமென்பதுடன் அதன்கண் காணப்படுகின்ற அல்லது வதிகின்ற எவரேனுமாளை அப்புறப்படுத்துதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய வளவுகளுக்குள் எவரேனுமாள் அதிகாரம் இல்லாமல் பிரவேசிப்பதைத் தடுத்தலும் அத்தகைய வளவுகளைப் பாதுகாத்தலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய கட்டிடத்தை, வளவுகளை அல்லது இடத்தைச் சொந்தமாக வைத்திருந்தார் என உரிமைகோருகின்ற எவரேனுமாள், அத்தகைய உடைமையில் இருந்து அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை விட்டுவிடுவதற்கான கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய கட்டிடம் அல்லது வளவுகள் அவர் அறியாமல் அல்லது அவரது அறிவுறுத்தல்களை மீறிப் பயன்படுத்தப்பட்டுள்ளனவென, அத்தகைய ஏதேனும் கட்டளையை வழங்குவதிலிருந்து இருவாரக் காலப்பகுதி முடிவுற்றபின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை விட்டுவிடலாம்:

ஆயின், மேலும், அத்தகைய வளவுகளை அல்லது கட்டிடத்தை உடைமையிலெடுத்தபின்னர் ஆறுமாதங்களைகொண்ட காலப்பகுதி யொன்றினுள் வழக்கொன்று கோப்பிடப்படாதிருக்குமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய கட்டிடம் அல்லது வளவுகள் அத்தகைய சொந்தக்காரருக்குத் திருப்பிக்கொடுக்கப்படுவதற்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

(2) எவரேனுமாள் இவ்வொழுங்குவிதியின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள விடத்தும், அத்தகைய வளவுகள், இவ்வொழுங்குவிதியின்கீழான தவறொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவென நீதிமன்றம் திருப்திப்படுமிடத்தும், மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய தவறு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனையுடன் மேலதிகமாக, அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளைப் பறிமுதல் செய்வதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

*12. (1) பொதுமக்களுக்கு அத்தியாவசிய வழங்குகைகளையும் சேவைகளையும் வழங்கும் நோக்கத்துக்காக நெல் மற்றும் அரிசி உட்பட்ட எவையேனும் அத்தியாவசிய உணவுப்பொருட்களையும் அத்தகைய பொருட்களை இடம்பெயர்க்கின்ற ஏதேனும் வாகனத்தையும் கைப்பற்றுவது அவசியமாகவுள்ளதெனத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் கருதுமிடத்து, அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி, நெல் மற்றும் அரிசி உட்பட்ட அத்தகைய உணவுப்பொருட்களையும் அத்தகைய உணவுப்பொருட்களை இடம்பெயர்க்கின்ற ஏதேனும் வாகனத்தையும் கைப்பற்றலாம்.*

*கொள்வனவுகளையும் இடம்பெயர்ப்பதற்கான வாகனங்களையும் கைப்பற்றுதல்.*

*(2) பொது ஒழுங்கைப் பேணுவதற்கும் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் நோக்கத்துக்காகவும் (1) ஆம் பந்தியின்கீழான நெல் மற்றும் அரிசி உட்பட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களைத் தகுதிவாய்ந்த அதிகாரி கைப்பற்றுமிடத்து, அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் அறிவுறுத்தலின்கீழ் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட விலைகளை அல்லது சுங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட விலைகளைக் கவனத்துட்கொண்டு நியாயமான விலைகளுக்குப் பாவனையாளர்களுக்கு அவற்றை வழங்குவதற்கான அல்லது வழங்குவதற்கு அதிகாரமளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.*

*(3) ஓராம் பந்தியின்கீழ் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அவ்வாறு செய்வது தேவைப்படுகின்றதெனத் தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படுமிடத்து, கட்டளை தொடர்புபட்ட ஓர் இடப்பரப்பில் வாகனமொன்றைத் தனதுடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள எவரேனுமாளை, கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஆள் அல்லது அதிகாரி அதனை அகற்றுவதற்கு அனுமதிக்கும்வரை, அத்தகைய வாகனத்தை அகற்றுதலாகாது அல்லது அகற்றச் செய்தலாகாது எனப் பணித்து, இலங்கை முழுவதும் தொடர்பாக அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பாக அவர் கட்டளையொன்றை ஆக்கலாம்.*

*(4) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளினால் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் எவரேனுமாள் எவரேனும் பொலிசு அலுவலரிடமிருந்து அல்லது வேறு பகிரங்க அலுவலரிடமிருந்து உதவிகோருமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அல்லது பகிரங்க அலுவலர் அவ்வாறு கோரப்பட்ட அத்தகைய உதவியை வழங்குதல் வேண்டும்.*

*(5) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக, "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தவிசாளர், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது ஏதேனும் மாவட்டத்தின் ஒரு மாவட்டச் செயலாளர் என்று பொருளாகும்.*

*13. (1) ஓர் அத்தியாவசியச் சேவையைப் பேணுவதற்கென உதவுவதற்கு அல்லது அது தொடர்பில் ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் தனிப்பட்ட சேவையை வழங்குவதற்குத் தமது கைப்பட்ட ஆணைப்பத்திரத்தின்மூலம் எவரேனுமாளைப் பணிக்கும்படி அதற்கெனத் தீர்மானிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட அதிகாரிகளை அல்லது அலுவலர்களைச் சனாதிபதி பணிக்கலாம் அல்லது அவர்களுக்கு அதிகாரமளிக்கலாம்.*

*தனிப்பட்ட சேவைகளைத் தேவைக்கெடுத்தல்.*

*(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழான ஏதேனும் கட்டளையை மீறுகின்ற அல்லது அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர்முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, அதற்காக விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்துடன் மேலதிகமாக —*

*(அ) அசைவற்ற அல்லது அசைவுள்ள அவரது எல்லா ஆதனத்துடனும் இணைந்துள்ள ஏதேனும் பாரபந்தத்திலிருந்து விடுபட்டதாக அதனை இழப்பிப்பதற்கு ஆளாதல் வேண்டும்;*

*(ஆ) இவ்வொழுங்குவிதிகள் பயனுறும் திகதிக்குப் பின்னர் அத்தகைய ஆளினாற் செய்யப்படும் ஆதனத்தின் ஏதேனும் கைமாற்றம் அல்லது கையுதிர்ப்பு வறிதானதாகவும் வறிதாக்கப்படற்பாலதாகவும் கருதப்படுதல் வேண்டும்.*

### *அட்டவணை*

*பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையை உரியமுறையில் பேணுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட நெல், அரிசி மற்றும் சீனி போன்ற அத்தியாவசிய பாவனையாளர் பொருட்களைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், சுத்திகரித்தல், இடம்பெயர்த்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான ஏதேனும் சேவையைப் புரிவதற்குத் தேவைப்பட்ட வேலையாளர்களை அல்லது தொழிலாளர்களைத் தொழிலுக்கமர்த்துதல்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*